# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No. 80/2023

சாட்சி : PW– 2
பெயர் : திரு. செல்லதுரை                                   தேதி : 11.09.2024

**குறுக்குவிசாரணை** :– (1 மற்றும் 5 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

மனுதாரரின் கணவர் ராமுவை எனக்கு 40 ஆண்டுகளாக தெரியும். என் வீட்டிற்கு அருகில் அவர் வசித்து வருகிறார். அவருடைய வாரிசுகள் அம்மாவுடன் சேர்த்து 6 பேர். 5 ம் தேதி போன் செய்து உயில் எழுதவேண்டும் என்று கூப்பிட்டார். 06.02.2020 ம் தேதியன்று உயில் எழுதினார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டேன். உயில் எழுதிய சமயத்தில் ராமு, நான், ரவிச்சந்திரன் வக்கீல், பழனியப்பன் தட்டச்சர், சுப்பாராவ் நோட்டரி வழக்கறிஞர் இருந்தார். ராமுவின் மனைவி மற்றும் வாரிசுகள் அப்பொழுது இல்லை. ராமு வக்கீல் ரவிச்சந்திரனிடம் சொல்லி உயில் தயாரிக்கப்பட்டது.

ம.சா.ஆ.–6 உயிலில் நான் முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். அந்த கையெழுத்து மேட்டு தெருவில் உள்ள சுப்பாராவ் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். எனக்குபின்னர் பாலசுப்பிரமணியம் என்பவர் கையெழுத்து போட்டார். அந்த உயில் 5 பக்கங்களை கொண்டது. ரூ.20/– முத்திரைத்தாள் மற்றும் பச்சை காகிதங்களில் தயாரிக்கப்பட்டது. முத்திரைத்தாள் ராமு வாங்கி வந்தார். ராமு 5 பக்கங்களில் கையெழுத்து செய்தார். நான் ஒரு பக்கத்தில் தான் சாட்சி கையெழுத்து போட்டேன். உயிலை வரைவு செய்தவர் ரவிச்சந்திரன். பழனியப்பன் என்பவர் தட்டச்சு செய்தார். அனைவரும் சுப்பாராவ் அலுவலகத்தில் கையெழுத்து போட்டார்கள்.

உயில் எழுதும் சமயத்தில் ராமு நன்றாக இருந்தார். நோட்டரி வழக்கறிஞர் 6 கையெழுத்து போட்டார். உயிலை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். ராமு உயிலை எடுத்து சென்றார். உயில் எழுதிய விவரத்தை நான் மனுதாரர் மற்றும் வாரிசுகளிடம் கூறவில்லை என்றால் ஆமாம். அவர் யாரிடமும்

சொல்லவேண்டாம் என்று கூறிவிட்டார். ராமு என்பவர் மாரடைப்பால் இறந்துவிட்டார். ராமு இறந்ததற்கு நான் போயிருந்தேன். 11 வது நாள் காரியத்திற்கு நான் போயிருந்தேன். அப்பொழுது நான் உயில் உள்ள விவரத்தை சொன்னேன் என்றால் ஆமாம். உயிலை நான் படித்து காண்பித்தேன் என்றால் ஆமாம். உயிலை மனுதாரர் எடுத்து வந்து கொடுத்தார்.

உயிலை படிக்கும்பொழுது மனுதாரர், அவருடைய மகன், மகள் மற்றும் ஐந்தாறு நபர் இருந்தார்கள். உயிலில் சொத்து விவரம் ராமு சொல்லி தயார் செய்யப்பட்டது. அந்த சொத்து ராமு விலைக்கு வாங்கியது. அந்த பத்திரத்தை நான் பார்த்ததில்லை. அது 550 சதுர அடி.

**குறுக்குவிசாரணை** :– (2 மற்றும் 4 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

எனக்கு வயது 50. ராமு முதலில் கன்ட்ரக்ட்டராக பணியாற்றி வந்தார். பின்னர் இரயில்வேயில் கான்ட்ராக்ட் எடுத்து தொழில் செய்து வந்தார். சக்திவேல் 1 ம் எதிர்மனுதாரர் எனக்கு சிறுவயது முதல் பழக்கம் என்றால் ஆமாம். ரவிச்சந்திரன் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து உயில் தயார் செய்யப்பட்டது. உயில் என்முன்னால் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு போகவில்லை. ராமுவின் வீடு அம்மாள் ஏரி, தாதகாப்பட்டியில் உள்ளது. என்னுடைய வீட்டிலிருந்து ராமு வீட்டிற்கு 8 கி.மீ. தூரம் உள்ளது. ராமு போன் மூலமாக எனக்கு தகவல் சொல்லி அதனால் நான் போனேன் என்றால் ஆமாம். 1 ம் எதிர்மனுதாரர் என்னுடைய நண்பர் என்பதன் அடிப்படையில் அவர் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ராமுவிற்கு வேறு எங்கும் சொத்து இல்லை. நான் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். ராமுவிற்கு 4 பெண் குழந்தை ஒரு ஆண் குழந்தை. அவர்கள் நாமக்கல், ஆத்தூர், பவானியில் வசித்து வருகிறார்கள். நான்கு பெண்களும் ராமுவின் இறப்பு காரியத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் உயில் சம்மந்தமாக ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. உயில் தவிர வேறு எதிலும் நான் சாட்சி கையெழுத்து அன்று போடவில்லை. நோட்டரி வழக்கறிஞர் எந்த நோட்டிலும் என்னிடம் கையெழுத்து

வாங்கவில்லை. உயில் பத்திரம் ராமு வைத்திருந்தார். ராமுவை கடைசியாக இரயில்வே ஸ்டேசன் ஜங்சனில் பார்த்தேன். ம.சா.ஆ.–6 உயில் போலியாக தயாரிக்கப்பட்டது என்றும் அதை தெரிந்துகொண்டு நான் பொய்யாக சாட்சிய அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் சொத்துக்காக வழக்கு போட்டுள்ளார். ராமு இறந்த பிறகு மனுதாரரை யார் பராமரித்து வருகிறார் என்பது எனக்கு தெரியாது.

உயிலில் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்ட பாலசுப்பிரமணியம் நண்பர் அல்ல. பழக்கமானவர். நானும் 1ம் எதிர்மனுதாரரும் பழக்கமானவர்கள். உயில் பற்றி மனுதாரர்களுக்கோ மற்ற வாரிசுகளுக்கோ நான் தெரிவிக்கவில்லை. உயில் சொத்து 550 சதுர அடி. ராமு அரசு மருத்துவமனையில் மாரடைப்பால் இறந்தார். அந்த சமயத்தில் கொரோனா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் ஆமாம். உயில் எழுதிய காலத்தில் நோய் தொற்று காலம் என்றால் சரியல்ல.

ராமு என்பவரின் பண பலன்கள் அவர் இறந்த பின்னிட்டு மனுதாரருக்கே முழுவதுமாக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமு என்பவர் கொரோனா நோய் பாதிப்பால் இறந்தார் என்றால் சரியல்ல.

( 3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.